DEPOSITION OF WITNESS

IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR), TIRUCHIRAPPALLI.

**O.S. No. 185/2023**

**P.W. 2**

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. காளிமுத்து** |
| Father's Name | : | **திரு.சுப்ரமணி** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of November 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜர் ஆகிறேன். வாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதி மோகன்ராஜை தெரியும். பிரதிவாதி ரெபேக்காள் அவர்களை எனக்கு தெரியும். கடன் பெறுவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு பிரதிவாதியை எனக்கு தெரியும். வாதி மோகன்ராஜை , பிரதிவாதி கடன் வாங்கிய தேதியில் இருந்து தெரியும். என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு சான்றாவணம் 1 பிராமிசரி நோட்டில் எழுதியதும் மற்றும் சாட்சியும் என்று நான் கையொப்பம் செய்திருக்கிறேன். கடந்த 31.03.2020 அன்று பிரதிவாதி கடன் பெற்றுக்கொண்டார். வாதி ரூ.10,00,000/- ரொக்கம் கடனாக பிரதிவாதிக்கு கொடுத்தார். வாதி தரப்பு சான்றாவணம் 1 பிராமிசரி நோட்டை நான் தான்

பூர்த்தி செய்தேன். வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் உள்ள ரெவன்யூ ஸ்டாம்பில் பிரதிவாதி கையொப்பம் செய்தார்.

(குறுக்கு விசாரணைக்கு வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe